## பாடம்: 6 - எழில் கொஞ்சும் அருவி

**வகுப்பு : III**

**பாடம் : தமிழ்**

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. ஒகேனக்கல் அருவியில் நீர் வீழ்வது ____ உருக்கி ஊற்றுவது போல் இருந்தது.

அ) தங்கத்தை ஆ) **வெள்ளியை** இ) இரும்பை ஈ) கற்பாறையை

2.'ஒகேனக்கல் என்ற சொல்லின் பொருள்________

அ) பவளப்பாறை ஆ) வழுக்குப்பாறை இ) பனிப்பாறை ஈ) **புகைப்பாறை**

3. 'வெண்புகை' இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது______

அ) வெண்+புகை ஆ) வெ+புகை **இ)வெண்மை+புகை** ஈ)வெம்மை+புகை

4. பாதை+அமைத்து இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _________

அ) பாதை அமைத்து ஆ) **பாதையமைத்து**

இ) பாதம் அமைத்து ஈ) பாதயமைத்து

5. தோற்றம் இச்சொல்லின் எதிர்ச்சொல் ____

அ) தொடக்கம் ஆ) **மறைவு** இ)முதல் ஈ) ஆரம்பம்

**ஆ. சரியா தவறா எழுதுக.**

1. ஒகேனக்கல் திருச்சி மாவட்டத்தில் உள்ளது. **தவறு**

2. அருவியிலிருந்து விழும் நீர், பாறையில் பட்டு, வெண்புகை போலத் தோன்றும். **சரி**

3. கடல் மட்டத்திலிருந்து ஒகேனக்கல் 1500 அடி உயரத்தில் உள்ளது. **சரி**

**இ. பொருள் எழுதுக.**

1. எழில் - அழகு
2. களிப்பு - மகிழ்ச்சி
3. நீராடலாம் - குளிக்கலாம்
4. பரவசம் - மகிழ்ச்சி

**ஈ. சரியான சொல்லால் நிரப்புக.**

1. கடற்கரையில் **மணல்** ( மனல் / மணல்) வீடு கட்டி விளையாடலாம்.
2. மரத்தில் பழங்கள் **குறைவாக** (குரைவாக/ குறைவாக ) உள்ளன.
3. வலப்பக்க சுவரின் மேல் **பல்லி** (பல்லி / பள்ளி ) இருக்கிறது.
4. ஆதிரைக்கு நல்ல **வேலை** (வேலை / வேளை ) கிடைத்துள்ளது.

KOSAVAPATTY ACADEMY MATRIC. SCHOOL KNOWLEDGE IS POWER

## உ. படங்களை இணைத்து சொற்களைக் கண்டுபிடிப்போமா?


தேன்


நீர்

தேனீர்


பனி


பாறை

பனிப்பாறை


பூ


மாலை

பூமாலை


இடி


ஆப்பம்

இடியாப்பம்

## ஊ. வினாக்களுக்கு விடையளி.

**1. ஒகேனக்கல் பகுதியில் நாம் பார்க்க வேண்டிய இடங்களைக் கூறுக.**

1) தேசநாதீஸ்வரர் கோவில்,
2) ஒகேனக்கல் அருவி,
3) தொங்குபாலம்.

இவைகளே ஒகேனக்கல் பகுதியில் நாம் பார்க்க வேண்டிய இடங்கள் ஆகும்.

**2. ஒகேனக்கல் அருவியில் நீர் விழும் காட்சி பார்ப்பதற்கு எப்படி இருக்கும்?**

ஒகேனக்கல் அருவியில் நீர் விழும் காட்சி பார்ப்பதற்கு அருவி நீர் கல்பாறையில் பட்டுத்தெறித்து, வெண்புகை போல இருக்கும்.

**3. சங்கவை பார்த்த மிகப்பழைமையான கோவிலின் பெயர் என்ன?**

சங்கவை பார்த்த மிகப்பழமையான கோவிலின் பெயர் தேசநாதீஸ்வரர் கோவில் ஆகும்.

**4. ஒகேனக்கல் அருவி எங்கே அமைந்துள்ளது?**

தருமபுரி மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஒகேனக்கல் அருவி எழில் கொஞ்சும் மலையில் உள்ள அந்த அருவி, பொன்னாகரம்

ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 16 கி.மீ தூரத்தில் உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 1500 அடி உயரத்தில் உள்ளது.

## எ. இனஎழுத்துகள்

க் – ங் | ச் – ஞ் | ட் – ண் | த் – ந் | ப் – ம் | ற் – ன்


சங்கு


மஞ்சள்


பந்து


வண்டு


பம்பரம்


கன்று

## ஏ. விடுபட்ட இடங்களில் சரியான இனஎழுத்துகள் நிரப்பலாமா?


செம்பருத்தி


குன்று


சுண்டல்


தொங்குபாலம்


இஞ்சி


ஆந்தை